# COVID-19 தடுப்பூசி தொடர்பான உங்களின் கேள்விகளுக்கான நம்பத்தகுந்த பதில்கள்

**மே 25, 2021**

நான்கு வகையான COVID-19 தடுப்பூசிகள் கனடாவில் பயன்படுத்துவதற்கென அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன, அத்துடன் உலகெங்கிலும் உள்ள பத்து லட்சக் கணக்கான மக்கள் இந்தத் தடுப்பூசிகளைப் பெற்றுள்ளனர். COVID-19 தடுப்பூசி ஒன்றைப் பெற்றுக்கொள்ளும்போது உங்களின் உடலுக்குள் என்ன செல்கிறது என்பதைப் பற்றிய சரியான தகவல்களை நீங்கள் அறிந்துகொள்வதற்காகத் தடுப்பூசிகளைப் பற்றிய பொதுவான கரிசனைகள் மற்றும் கேள்விகள் தொடர்பாக இந்த செய்தியறிக்கை பேசுகிறது. இந்த செய்தியறிக்கையில் உள்ள தகவல்கள் மருத்துவர்களாலும் ஆய்வாளர்களாலும் உறுதிசெய்யப்பட்டுள்ளன.



## எனக்கு ஒவ்வாமை இருந்தாலும், இந்தத் தடுப்பூசியை நான் பெற்றுக்கொள்ளலாமா?

ஆம், உணவுகள், மருந்துகள் அல்லது பிற பொருட்களுக்குக் கடந்தகாலத்தில் பாரதூரமான ஒவ்வாமை எதிர்த்தாக்கங்கள் உங்களுக்கு ஏற்பட்டிருந்தாலும்கூட COVID-19 தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வது உங்களுக்குப் பாதுகாப்பானது. கடந்தகாலத்தில் பாரதூரமான ஒவ்வாமை எதிர்த்தாக்கங்கள் உங்களுக்கு ஏற்பட்டிருந்தால், தடுப்பூசியால் பிரச்சினை எதுவும் உங்களுக்கு ஏற்படவில்லை என்பதை உறுதிசெய்வதற்காக, தடுப்பூசி போட்ட பின்னர் 30 நிமிடங்கள் அந்தத் தடுப்பூசி மையத்தில் காத்திருங்கள். ஏதாவது எதிர்வினைத் தாக்கம் உங்களுக்கு ஏற்பட்டால் அதற்கான ஆதரவை உங்களுக்கு வழங்குவதற்கு மருத்துவப் பணியாளர்கள் எப்போதும் அந்த இடத்தில் இருப்பார்கள். COVID-19 தடுப்பூசியிலுள்ள குறிப்பிட்டதொரு மூலப்பொருளுக்கு (polyethylene glycol [PEG] அல்லது polysorbate போன்றவை), அல்லது முதல் தடவை வழங்கப்படும் COVID-19 தடுப்பூசிக்கு எதிராக உங்களுக்குப் பாரதூரமான ஒவ்வாமை எதிர்த்தாக்கம் ஏற்பட்டிருந்தால், எவ்வாறு தடுப்பூசியைப் பாதுகாப்பாகப் பெற்றுக்கொள்வது என்பது பற்றி உங்களின் ஆரோக்கிய வழங்குநருடன் நீங்கள் பேசவேண்டும். இந்த குறிப்பிட்ட ஒவ்வாமை மிகவும் அரிதானது என்பதைத் தயவுசெய்து கவனியுங்கள்.



## ஏதாவது நோய் எனக்கிருந்தாலும் தடுப்பூசியை நான் பெற்றுக்கொள்ளலாமா?

நீரிழிவு நோய், உயர் இரத்த அழுத்தம், இதய நோய், தொய்வு, குருதிச் சோகை போன்ற நோய்கள் உங்களுக்கு இருந்தாலும்கூட, நீங்கள் தடுப்பூசியைப் பாதுகாப்பாகப் பெற்றுக்கொள்ளமுடியும்.

குறிப்பிட்டதொரு ஆரோக்கியப் பிரச்சினை உங்களுக்கு இருந்தால் அல்லது உங்களின் நோயெதிர்ப்பு சக்தியைப் பலவீனப்படுத்தும் ஒரு மருந்தை நீங்கள் எடுக்கிறீர்கள் (நோயெதிர்ப்புச் சக்தியைக் குறைக்கும் நோய் அல்லது கீமோதெரபி அல்லது மிகச் செறிவான steroid மாத்திரைகள் போன்ற நோயெதிர்ப்புச் சக்தியைக் குறைக்கும் மருந்துகள்) அல்லது உங்களின் உடலே அதனைத் தாக்குமொரு (autoimmune) நோய் உங்களுக்கு இருக்கிறது எனில், தடுப்பூசியை எப்போது பெற்றுக்கொள்வது சிறந்தது என்பதைத் தீர்மானிப்பதற்காக உங்களின் ஆரோக்கியப் பராமரிப்பு வழங்குநருடன் நீங்கள் பேசவேண்டும்.



## பெரும்பாலான மக்கள் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளும் வரை நான் காத்திருக்க வேண்டுமா?

இல்லை. உங்களால் முடிந்தளவு விரைவாகத் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளுங்கள். COVID-19 ஆல் நீங்கள் நோய்வாய்ப்படுவதிலிருந்தும் மரணமடைவதிலிருந்தும் அது உங்களைப் பாதுகாக்கும். மே 25 ஆம் திகதி நிலவரப்படி, உலகெங்கிலும் உள்ள 1 பில்லியனுக்கும் அதிகமான மக்களுக்கு COVID-19 தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளன. தொற்றுநோயை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு, பெரும்பாலான மக்கள் தடுப்பூசி பெற்றுக்கொள்ள வேண்டும்; எவ்வளவு விரைவாக நாங்கள் அனைவரும் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்கிறோமோ அந்தளவுக்குப் பாதுகாப்பாக எங்களின் சமூகங்கள் இருக்கும்.



## எவ்வளவு காலத்துக்கு என்னைத் தடுப்பூசி பாதுகாக்கும்?

தடுப்பூசிகள் எவ்வளவு காலம் பாதுகாப்பை வழங்குகின்றன என்பதைக் கண்டறிவதற்கு ஆய்வாளர்கள் முயற்சித்துக் கொண்டிருக்கின்றனர். COVID-19 வைரசிலிருந்து தொடர்ந்து பாதுகாப்பாக இருப்பதற்கு நீங்கள் நோயெதிர்ப்புச் சக்தியை அதிகரிப்பதற்கான தடுப்பூசிகளை எதிர்காலத்தில் பெற்றுக்கொள்ள வேண்டியிருக்கலாம்.

COVID-19 தடுப்பூசிகளின் வகையைப் பொறுத்து அது ஒரு தடவை அல்லது இரண்டு தடவை வழங்கப்படுகின்றது. நீங்கள் பெற்றுக்கொள்ளும் தடுப்பூசி இரண்டு தடவை வழங்கப்படும் தடுப்பூசியாக இருந்தால், இரண்டாம் முறை பெற்றுக்கொள்வதற்குப் பிறிதொரு நாளில் வரும்படி கேட்கப்படுவீர்கள். அந்தத் தடுப்பூசியை நீங்கள் இரண்டு தடவைகள் பெற்றுக்கொள்வது அவசியம், அப்படியானால் பாரதூரமான COVID-19 நோய் அல்லது மரணத்திலிருந்து முழுமையாக நீங்கள் பாதுகாக்கப்படும் அளவு அதிகமாக இருக்கலாம்.

நினைவில் வைத்திருங்கள்: தடுப்பூசியைப் பெற்றுக்கொண்ட பின்னரும் முகக்கவசம் ஒன்றை அணிதல், மற்றவர்களிடமிருந்து தூர விலகியிருத்தல், உங்களின் கைகளைக் கழுவுதல் போன்ற COVID-19 பாதுகாப்பு நடவடிக்கைகள் அனைத்தையும் தொடர்ந்தும் நீங்கள் பின்பற்ற வேண்டும்.

நீங்களும் நீங்கள் விரும்பும் நபர்களும் COVID-19 ஆல் நோய்வாய்ப்படாமல், தடுப்பூசிகள் பாதுகாக்கின்றன. எவ்வளவு அதிகமான மக்கள் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்கிறார்களோ அவ்வளவு அதிகமான பாதுகாப்பு ஒவ்வொருவருக்கும் கிடைக்கும்!

**இந்த அறிக்கை உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்! ஒலிப்பதிவாக அல்லது வீடியோவாகப் பதிவுசெய்வதற்கு இந்த ஆவணத்தைப் பயன்படுத்தும்படி அல்லது மேலதிகமான மொழிகளில் இதை மொழிபெயர்த்து ஏனையோருடன் பரவலாகப் பகிரும்படி உங்களை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். தயவுசெய்து மூலத்தைக் குறிப்பிட மறக்காதீர்கள்: Women's College Hospital, OCASI, TAIBU Community Health Centre மற்றும் Refugee 613.**

*மே 25, 2021 நிலவரப்படி துல்லியமானது*

**இந்தச் செய்தியறிக்கையிலுள்ள தகவல்கள் கனேடிய மருத்துவர்களால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன: Meb Rashid MD, துணைப் பேராசிரியர், ரொறன்ரோப் பல்கலைக்கழகம்; Vanessa Redditt, MD, விரிவுரையாளர், ரொறன்ரோப் பல்கலைக்கழகம; மற்றும் Isaac I. Bogoch, MD, இணைப் பேராசிரியர், ரொறன்ரோப் பல்கலைக்கழகம்**


Funded by: Immigration, Refugees and Citizenship Canada

Financé par : Immigration, Réfugiés et Citoyenneté Canada

With contributions from: pchs Serving Diverse Communities; Occupational Health Clinics for Ontario Workers Inc.; MCIS Language Solutions